# எனது வாழ்க்கைப் பாதையின் கடந்த காலச்சுவடுகள்

**இதழ் 130இன் தொடர்ச்சி: ஆசிரியர் ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அ.கிருஷ்ணமாசார்யர்.**

## ஜம்மு காஷ்மீர் ஹஸ்ரத்பால் மசூதியில் வைக்கப்பட்டிருந்த முகம்மது நபியின் தலைமுடி காணாமற் போனதும், அதன் விளைவாக ஏற்பட்ட கலவரமும்

1963ஆம் ஆண்டு டிசம்பர் 27ம் நாள் ஸ்ரீநகரிலுள்ள ஹஸ்ரத்பால் (Hazratbal) மசூதியில் வைக்கப்பட்டிருந்த முகமது நபியின் ''தலைமுடி'' திடீரென்று காணாமற் போய்விட்டது. இதன் விளைவாக ஜம்மு காஷ்மீரிலும், இந்தியாவின் மற்ற பகுதிகளிலும் கலவரம் மூண்டது. ஒரு வாரத்திற்குபிறகு, காணாமற்போன முகமது நபியின் ''தலைமுடி'' கண்டுபிடிக்கப்பட்டதாகவும், அது ஹஸ்ரத் பால் மசூதியில் மீண்டும் வைக்கப்பட்டதாகவும் செய்திகள் வெளி யாயின. கிழக்கு பாகிஸ்தானில் 1964ஆம் ஆண்டு ஜனவரி மாதம் விளைந்த கலவரத்தால் ஆயிரக்கணக்கான இந்துக்கள் அங்கிருந்து வெளியேறினர். பலர் கொல்லப்பட்டனர். முகமது நபியின் ''தலைமுடி'' எவ்வாறு மறைந்தது, அது எவ்வாறு மீண்டும் கொண்டு வரப்பட்டது என்பது ஒரு புரியாத புதிராகவே இருந்தது. திரும்பப் பெறப்பட்ட தலைமுடி முகமது நபியினதுதானா? என்ற ஐயப் பாட்டினை பலர் வெளியிட்டனர். அந்த நேரத்தில் திரு.ஜவஹர்லால் நேரு தன்னுடைய எண்ண ஓட்டங்களை அறிந்து செயல்படுபவரான திரு.லால்பகதூர் சாஸ்திரியை ஸ்ரீநகருக்கு அனுப்பி வைத்தார். அவர் அங்கே சென்று மதத்தலைவர்களுடனும் மற்றைய அதிகாரி களுடனும் பேச்சு வார்த்தை நடத்தினார். மூத்த முஸ்லீம் மதத் தலைவர்களின் குழு ஒன்றினை நியமித்தார் திரு. சாஸ்திரி. அந்தக் குழுவினர், ஹஸ்ரத்பால் மசூதியில் மீண்டும் வைக்கப்பட்டுள்ள தலைமுடி முன்பு இருந்த தலைமுடியே என்று உறுதி செய்தனர்.

***(ராஜீவ்காந்தி பிரதமமந்திரியாகப் பொறுப்பேற்ற உடன் அப்போது பதவியிலிருந்த வெளியுறவுச் செயலரான திரு.*** A.P. ***வெங்கடேச் வரனை ராஜினாமா செய்திடும்படியான ஒரு நெருக்கடியை உண்டு***

***பண்ணினார். இந்த* A.P.*வெங்கடேச்வரன்தான் திரு.நேரு காலத்தில் காஷ்மீரில் கலவரம் ஏற்பட்டபோது உள்துறைச் செயலராகப் பணியாற்றி வந்தவர். யாது காரணங்களாலோ ராஜீவ் காந்தி பிரதமமந்திரியாகப் பொறுப்பேற்றவுடன் திரு.வெங்கடேச்வரன் பதவியில் தொடர்ந்து இருப்பதை விரும்பவில்லை. பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில்*** ‘‘You will see a new Foreign Secretary Tommorow" ***என்று கூறி*** A.P.***வெங்கடேச்வரனை அவமானப்படுத்தினார்.)***

**காஷ்மீர் பிரச்சனைக்குத் தீர்வுகாணும் முயற்சியில் திரு.நேரு ஈடுபட்டார்.**

இவ்வாறாக திரு.சாஸ்திரியின் தலையீட்டால் நாட்டில் நிகழ்ந்து வந்த கலவரங்கள் ஓர் முடிவிற்கு வந்தன. ஜம்மு காஷ்மீரில் மீண்டும் அமைதி நிலவியது. திரு.G.M.Sadiq ஜம்மு காஷ்மீரின் முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஹஸ்ரத்பால் நிகழ்ச்சி ஜம்மு காஷ்மீரில் நடந்த போதிலும் இதன் தாக்கம் உலகெங்கிலும் வெளிப் பட்டது. காஷ்மீர் பிரச்சினைக்கு ஓர் தீர்வு காண வேண்டும் என்று திரு.நேரு எண்ணம் கொண்டார். இந்தியா சுதந்திரம் அடைந்தபோது கவர்னர் ஜெனரலாக இருந்த லார்டு மௌண்ட்பேட்டன் காஷ்மீர் பிரச்சனையால் இந்தியாவிற்குத் தலைகுனிவே ஏற்பட்டுள்ளது. அதை பாகிஸ்தானிடம் ஒப்படைப்பதே ‘சிறந்த செயலாகும்’ என்ற அறிவுரையை அவ்வப்போது நேருவிற்கு அளித்து வந்தார்.

இதன் விளைவாக காஷ்மீர் பிரச்சனை குறித்து இந்தியா பாகிஸ்தான் நாடுகளிடையே பலமுறைப் பேச்சுவார்த்தைகள் நடத்தப் பட்டன. ***(ஸ்ரீரங்கம் கோயில் நாதமுனி ஸந்நிதி, வேதாந்த தேசிகன் ஸந்நிதி, தன்வந்திரி ஸந்நிதி விவகாரங்கள் போல கலியுகம் முடியும் வரை காஷ்மீர் பிரச்சனைக்குத் தீர்வு காண இயலாது. அந்தப் பிரச்சனை கோமா***(Coma) ***நிலையில் இருக்கும் ஒரு நோயாளியைப் போன்றது. அவ்வப்போது ‘‘டிரிப்’’ மூலம் மருந்துகளையும் குளுக்கோசையும் ஏற்றிக் கொண்டே உயிர் வாழ வேண்டியதுதான்.)*** இந்தியா தரப்பில் பழுத்த அரசியல் வாதியான திரு.ஸ்வர்ணசிங்கும், பாகிஸ்தான் தரப்பில் திரு. புட்டோவும் கலந்து கொண்டனர். ஆனால் ஜம்மு காஷ்மீரிலிருந்து எந்த முஸ்லீம் மதத் தலைவரும் இந்தப் பேச்சு வார்த்தையில் பங்கு கொள்ள அழைக்கப் படவில்லை. ஹஸ்ரத்பால் நிகழ்ச்சிக்குப் பிறகு திரு.நேரு இந்த வெறுமையைப் பற்றி சிந்தித்தார். சிறையில் அடைக்கப்பட்டிருந்த

ஜம்மு காஷ்மீரின் முன்னாள் முதல்மந்திரியான ஷேக் அப்துல்லாவை விடுதலை செய்து அவரை இந்தப் பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்வதற்கான ஆயத்தங்களைச் செய்தார் திரு.நேரு.

**ஷேக் அப்துல்லா 1953ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு, பல ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டார். அதன் பின்புலம் யாது?**

1953ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் எந்தவித குற்றச் சாட்டுகளையும் சுமத்திடாமல் ஜம்மு காஷ்மீரின் அரசியல் தலைவர் களில் ஒருவரான ஷேக்அப்துல்லா கைது செய்யப்பட்டு வீட்டுக்காவலில் சிறை வைக்கப்பட்டார். 1958ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அவர் விடுதலை செய்யப்பட்டார். ஜம்மு காஷ்மீரை சென்ற டைந்த ஷேக்அப்துல்லாவிற்கு மக்களால் மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. ஹஸ்ரத்பால் மசூதி உட்பட பல இடங்களில் அவர் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்த கூட்டங்களில் உரை யாற்றினார். ஷேக் அப்துல்லாவின் இந்த அரசியல் செல்வாக்கு பலருக்கு அச்சத்தை உண்டு பண்ணியது. அவர் மீண்டும் கைது செய்யப்பட்டு, ஜம்மு காஷ்மீரில் உள்ள சிறைச்சாலை ஒன்றில் அடைக்கப்பட்டார். பாகிஸ்தானுடன் கூட்டுச் சேர்ந்து இந்தியாவைப் பிளவு செய்வதற்குத் திட்டமிட்டார் என்றும், இந்து மற்றும் முகம் மதியர் சமுதாயத்தினரிடையே பிளவை உண்டாக்கும் செயல்களைச் செய்ய முற்பட்டார் என்றும், அமைதியைக் குலைக்க முற்பட்டார் என்றும், பாகிஸ்தானிடமிருந்து பெருமளவில் பணம் மற்றும் பயங்கர ஆயுதங்களைப் பெறுவதற்கு ரகசிய ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டார் என்றும் அவர் மீது குற்றங்கள் சுமத்தப்பட்டன. ஷேக் அப்துல்லா மீதான வழக்கு நீதிமன்றத்தில் நடைபெற்றுக் கொண்டி ருந்தபோது, 1964ஆம் ஆண்டு சீனாவிடம் பெற்ற தோல்வியால் நிலைதடுமாறிய திரு.நேரு, தம்முடைய காலத்திலேயே காஷ்மீர் பிரச்சனைக்கு ஓர் முடிவு காண முயன்றார்.

**ஷேக்அப்துல்லாவின் விடுதலை---'காஷ்மீர் என்ற மணப் பெண்ணை அவள் எண்ணம் என்ன என்பதை அறியாது திருமணம் செய்து கொள்ள விரும்பும் மணமகன்கள் இந்தியாவும், பாகிஸ் தானும்' என்ற கருத்தைக் கொண்டிருந்தார் ஷேக்அப்துல்லா.**

அதற்கு முன்னோடியாக ஷேக் அப்துல்லா மீதான வழக்குகள்

அரசாங்கத்தால் திரும்பப் பெறப்பட்டன. திரு.லால்பகதூர் சாஸ்திரி அரசின் இந்த முடிவை அறிவித்தார். 08.04.1964ஆம் நாள் ஷேக் அப்துல்லா விடுதலை செய்யப்பட்டார். விடுதலை செய்யப்பட்ட ஷேக் அப்துல்லா காஷ்மீர் பிரச்சனைக்கு நேருவின் காலத்திலேயே ஓர் தீர்வு காணப்பட வேண்டும் என்று முழக்கமிட்டார். ஷேக் அப்துல்லாவை டில்லிக்கு வருமாறு அழைப்பு விடுத்தார் நேரு. அதை ஏற்று திறந்த காரில் ஸ்ரீநகரிலிருந்து டில்லிக்குப் புறப்பட்டார் ஷேக்அப்துல்லா. வழி நெடுகத் திரண்டிருந்த மக்களுக்கு மத்தியில் உரையாற்றிக் கொண்டே சென்றார் அப்துல்லா. ‘ஜம்மு காஷ்மீர் என்ற பெண்ணை திருமணம் செய்து கொள்ள இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய மணமகன்கள் ஆசைப்படுகின்றனர். ஜம்மு காஷ்மீராகிய பெண் தனக்குத்தான் சொந்தம் என்று இந்த இருமணமகன்களும் எண்ணம் கொண்டுள்ளனர். ஆனால் இந்த இருவருமே ஜம்மு காஷ்மீராகிய மணப்பெண்ணின் மனதில் என்ன ஆசை உள்ளது என்பதை அறிந்து கொள்ள முயலவில்லை. அதனால்தான் இந்தத் திருமணம் நடைபெற வில்லை’ என்று தமது எண்ணத்தை வெளிப் படுத்தினார்.

**ஷேக்அப்துல்லாவுடன் பேச்சு வார்த்தை நடத்தக்கூடாது என்ற எதிர்ப்புக்குரல் வலுத்தது இந்தியாவில்.**

டில்லி வட்டாரங்களில் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த பலர் ஷேக் அப்துல்லாவிற்கும் நேருவிற்கும் இடையே நடைபெற உள்ள சந்திப்பை விரும்பவில்லை. அவர்கள் காஷ்மீர் இந்தியாவோடு இணைந்தது முடிந்ததொரு நிகழ்ச்சியாகும். ஆகவே அந்த நிலைக்கு ஏற்பத்தான் பேச்சுவார்த்தை நடைபெற வேண்டுமே ஒழிய வேறு எந்தக் கோணத்திலும் பேச்சுவார்த்தைகள் நடைபெறக்கூடாது என்று வலியுறுத்தினர். மற்றைய எதிர்க்கட்சிகளும் ஷேக் அப்துல்லாவின் கருத்துக்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். ராஜாஜி, மினு மஸானி, வாஜ்பாய், ஜே.பி. போன்ற அரசியல் தலைவர்களும் தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தினர். டில்லியில் திரு.நேருவைச் சந்தித்த பிறகு தமது நீண்ட கால நண்பரான ராஜாஜியை, சென்னைக்குச் சென்று சந்தித்தார் ஷேக் அப்துல்லா. பாகிஸ்தான் நாட்டின் அதிபரான அயூப்கானின் அழைப்பின் பேரில் ராவல்பிண்டிக்குச் சென்று பாகிஸ்தான் அதிபரைச் சந்தித்தார் ஷேக் அப்துல்லா. ***(ஆனால்***

*இன்றுவரை காஷ்மீர் பிரச்சனைக்கு எந்தத் தீர்வையும் காண இயலவில்லை. மௌண்ட்பேட்டனின் சூழ்ச்சியால் பாகிஸ்தான் உருவானது. பாகிஸ்தான் மட்டும் உருவாக்கப்படாமல் இருந்தால் இந்தியாவின் பொருளாதாரம் அமெரிக்கப் பொருளாதாரத்தையும் விஞ்சியிருக்கும். அதற்குக் காரணம் ஆண்டுதோறும் பல கோடி ரூபாய்கள் எல்லைப் பாதுகாப்பிற்கும் பாகிஸ்தானிடம் பேச்சு வார்த்தை நடத்துவதற்குமே செலவழித்து வருகிறோம்.)*

**நேருவின் மறைவும், திரு.லால்பகதூர் சாஸ்திரி பாரதப் பிரதமராகப் பொறுப்பேற்றுக் கொள்ளுதலும்.**

1964ஆம்ஆண்டு மே மாதம் 27 ஆம் நாள் நேரு இறந்தார். நாடே சோகத்தில் மூழ்கியது. நேரு இறந்த பிறகு ஹரியானாவைச் சார்ந்த குல்சாரிலால்நந்தா தற்காலிகப் பிரதம மந்திரியாகப் பொறுப்பு வகித்து வந்தார். இந்தியப் பிரதமராக ஆவதற்கு திரு.மொரார்ஜி தேசாயும், திரு.லால்பகதூர் சாஸ்திரியும் போட்டியிட்டனர். இந்த இருவரில் திரு.சாஸ்திரி அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டவராய் இருந்ததால் அவர் காங்கிரஸ் கட்சியால் தேர்ந்தெடுக்கப்பட்டு 02.06.1964 ஆம் நாள் பாரதப் பிரதமராகப் பதவியேற்றார்.

**இந்தியன் ஆயில் நிறுவனத்தில் என்னுடன் விசாகப் பட்டினத்தில் பணிபுரிந்தோரைப் பற்றிய நினைவலைகள்.**

விசாகப்பட்டினம் இந்தியன் ஆயில் நிறுவனத்தில் என்னோடு பணி புரிந்தவர்களில் குறிப்பிடத்தக்கவர் திரு. ராம் மோகன். நான் இந்தியன் ஆயில் நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்த போது எனக்கு வயது 24. பர்மாஷெல் கம்பெனியில் வேலை பார்த்துவந்த ராம்மோகன் (வயது 55) அந்தக் கம்பெனியில் இருந்து வெளியே அனுப்பப்பட்டவர்களில் ஒருவராவார். இந்தியன் ஆயில் நிறுவனத்திற்கு அதிக அளவில் ஊழியர்கள் தேவைப்பட்டதால் மற்றைய ஆயில் கம்பெனிகளில் பணியிலிருந்த, வேலைநீக்கம் செய்யப்பெற்ற பலர் இந்தியன் ஆயில் நிறுவனத்தில் உயர் பதவி களில் நியமனம் பெற்றனர். சூப்பர்வைஸரான திரு.ராம்மோகன் சுத்த வெள்ளை உடையில் வேலைக்கு வருவார். (சமையல் தொழிலில் ஈடுபட்டிருப்போர் வெள்ளை உடையணிந்து அந்தத் தொழிலைச் செய்யமுடியாது. அதற்காக அவர்கள் காவி வேட்டி அணிந்து சமையல்

தொழிலில் ஈடுபடுகிறார்கள். அதேபோலத்தான் மண்ணெண் ணைக் கம்பெனியில் வேலை செய்பவர்கள் வெள்ளை உடையணிந்து வேலை செய்ய முடியாது. இதற்கொரு விதிவிலக்கு ராம் மோகன். எண்ணெய்க்கிடங்கில் எங்கு சென்றாலும் ஏதோவொரு வகை எண்ணெய் நம் உடலில் ஒட்டிக்கொள்ளும். இவர் யாரைப் பார்த்தாலும் முகவாய்க்கட்டையை தொட்டுபிடித்துக்கொண்டு ''பாபு நைனா மஞ்சிக்க உன்னாவா'' (நீ நலமுடன் உள்ளாயா? என்பது இதற்குப் பொருள்) என்று கேட்பார். தன்னுடைய வேலையில் கண்ணும் கருத்துமாய் இருப்பார். உணவு இடைவேளையின் போது கூட தெற்கும் வடக்குமாக அந்தக் கிடங்கில் மேற்பார்வையிட்டு வருவார். ஆனால் ஒருநாள் நடந்த ஓர் விவாதத்தின்போது Installation Manager மீது தன் கையிலிருந்த Godown சாவிகளை வீசிஎறிந்து விட்டு தன் வேலையை ராஜினாமா செய்துவிட்டு சென்றுவிட்டார்.

**மதிய உணவைப் பங்கிட்டு உண்ணவேண்டும்.**

'Cochin cafe' என்ற உணவு விடுதியிலிருந்து (Coal Jetty லிருந்து சுமார் 6 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது இந்த உணவு விடுதி) ''படாகேரியர்'' என்னும் கேரியரில் மதிய உணவு வரும். இதை ஒரு வயதான பெண்மணி வெயில், மழை என்று பாராது சுமந்து வருவாள். அதற்குக் கூலி மாதம் 5 ரூபாய். மூன்று ரூபாய் சாப்பாட்டு டிக்கெட்டிற்கு இரண்டரை மனிதர்கள் சாப்பிடக்கூடிய அளவிற்கு அன்னம் மற்றும் காய்கறிகள் வைக்கப்பட்டிருக்கும். சாப்பாட்டுச் செலவிற்கு என்று ஒதுக்கப்பட்ட பட்ஜெட் மொத்தமே அறுபது ரூபாய்தான். அதனால் மூன்றுபேர் சேர்ந்து இந்த மூன்றுரூபாய் டிக்கெட்டில் படாகேரியரில் சாப்பாட்டை வரவழைத்துச் சாப்பிட்டு வந்தோம். நான், என் நண்பன் கார்த்திகேயன் மற்றும் பீமாராவ். ***(இவன் காக்கிநாடாவிற்கு. அண்மையில் உள்ள ஒரு கிராமத்தைச் சேர்ந்தவன். 1965ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஊருக்குச் சென்றவன் திரும்பவே இல்லை. அங்கு அவன் தற்கொலை செய்து கொண்டதாகச் செய்தி எங்களை வந்தடைந்தது. சாப்பாட்டு மேஜையில் பல நாட்கள் அவனைப் பற்றி பின்வரும் காலங்களில் பேசிக்கொண்டிருப்போம்.***)

சில நாட்கள் கப்பலில் இருந்தோ அல்லது Caltex Refinery எண்ணெய்க் குழாய்கள் மூலம் மதியம் 12.30-13.00 வரையிலான நேரத்தில் Interface எனப்படும் ஒரு எண்ணெயை மற்றொரு

எண்ணெய் தள்ளிக்கொண்டு வரும் நேரத்தில் அந்தந்த எண்ணெய்க் குரிய Tankக்குகளில் உரிய நேரத்தில் திருப்பிவிட வேண்டும். இல்லையேல் மண்ணெண்ணெய் Tankக்குள் டீசலோ, டீசல் Tankக்குள் மண்ணெண்ணெயோ, Furnace Oil Tankக்குக்குள் Light Dieselஆயிலோ சென்று விடக்கூடும். ஆகவே சாப்பாட்டு நேரம் குறுக்கிட்டாலும் இந்த வேலையைச் செய்து முடித்த பின்னர்தான் சாப்பிட இயலும். அதற்குள் மற்றையோர் சாப்பிட்டு விட்டு அரை வயிறுகூட நிரம்பாத அளவிற்கு கேரியரில் மீதம் வைத்துவிட்டு சென்று விடுவர். மிக்க பசியோடு சாப்பிடச் சென்றால், அங்கு நான்கு கவளம் அன்னமே இருக்கும்.

எல்லாவிடத்திலும் காணப்படுவதுபோல் இந்தியன் ஆயில் Terminalகளில் ஒரு மலையாள நாயர் டீ, பன் மற்றும் பஜ்ஜி அல்லது வடை ஆகியவற்றை விற்பனை செய்வான். அவனுக்கென ஒரு இடம் ஒதுக்கித் தரப்படும். ஆயில் கம்பெனிகளில் இதுபோன்ற சிறிய அளவு உணவு விடுதிகளை நடத்துவதற்கு நீர், தேவைப்பட்டப் பாத்திரங்கள், எரிபொருள் (கேஸ் அல்லது மண்ணெண்ணெய்), மின்சாரம், இடத்திற்கு வாடகையின்மையாகிய சலுகை கம்பெனியால் தரப்படும். விற்பனை செய்பவர் மற்றையோருக்கு அளிக்கும் விலையிலிருந்து 25 சதவீதம் விலையைக் குறைத்து கம்பெனி ஊழியர்களுக்குத் தரவேண்டும். நான் வளர்ந்த விதம் இதுபோன்ற இடங்களில் டீ அருந்துவதையோ, பஜ்ஜியைச் சாப்பிடுவதையோ தடுத்து நிறுத்தியது. ஆகவே என் பசியை ஆற்றிக் கொள்வதற்குப் பானையில் வைத்திருக்கும் குடிநீரே உதவியது. ***(கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த போதும், வேலையில் சேர்ந்த ஆரம்பகால கட்டத்திலும் இதுபோன்ற பல துன்பங்களை நான் எதிர்கொள்ள நேர்ந்தது.)***

**இந்தியன்ஆயில் நிறுவனத்தில் சிலர் ஆடிய ஆட்டங்களும், பாடிய பாட்டுக்களும்.**

R.**சண்முகம் என்பவர்** Management Trainee **ஆகப்பணியில் சேர்ந்தார். இவர் விழுப்புரத்தைச் சார்ந்தவர். இவர் தந்தை** Esso **கம்பெனி டீலராக இருந்தவர். அரசியல் செல்வாக்கு கொண்டவர். தி.மு.க.வைச் சேர்ந்த நாஞ்சில் மனோகரனுக்கு நெருக்கமானவர். அவர் அப்போது மக்களவை உறுப்பினராக இருந்து வந்தார். அவர்தன் குலப்பெருமையை காப்பாற்றுவதற்காகத்தான் வேலைக்கு**

**வந்துள்ளதாகவும், இந்தியன் ஆயில் கம்பெனியில் வேலை செய்து பிழைக்க வேண்டும் என்ற கட்டாயம் தமக்கு இல்லை என்றும் எங்களிடம் கூறி வருவார். தான் எந்த வேலையையும் செய்ய மாட்டார். மற்றவர்களை வேலை வாங்குவதில் வல்லவர்.** ***(இவர் பின்னாட்களில் கொருக்குப் பேட்டை இந்தியன் ஆயில் டெர்மினல் மேனேஜராக பணியாற்றிய பிறகு பாம்பே தலைமை அலுவலகத்தில் அட்மினிஸ்ரேட்டிவ் மேனேஜராக பணியாற்றி வந்தார். அப்போது யாது காரணங்களுக்காகவோ கட்டாய ஓய்வு கொடுத்து வீட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டார். இந்தியன் ஆயில் நிறுவனத்தில் பல அதிகாரிகள் ''பதவி'' என்னும் மது மயக்கத்தில் மிதந்து கொண்டிருந்தார்கள். இப்போதும் மிதந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் காலச்சக்கரச் சுழற்சியில் இவர்கள் எல்லோரும் அந்தந்தக் காலங்களில் காணாமற் போய்விடுவர். அவ்வாறு காணாமற் போனவர்களில் ஒருவர் R.சண்முகம். இவர் ஆடிய ஆட்டங்களென்ன! பாடிய பாட்டுக்களென்ன! அதிகார அத்துமீறல்கள் என்ன! இவற்றையெல்லாம் கதைக்கு கருவாகக் கொண்டு பல ஆண்டுகளுக்கு மெகா சீரியல் தயாரிக்கலாம். என்னுடைய 34 வருட அனுபவத்தில் நினைவில் நிற்போர் பலர். மறந்திட நினைப்போர் சிலர். அவர்கள் ஆடிய ஆட்டங்களை இந்தக் கடந்த கால வாழ்க்கைச் சுவடுகள் கட்டுரைப்பகுதியின் பின்பகுதியில் எழுத உள்ளேன்.)***

## Cashier G.V.S.Avadhaniயும் பதவி உயர்வுக் கனவும்.

Cashier G.V.S.Avadhani (எப்போதும் ஒரு கூண்டுக்குள் இருந்து கொண்டு வேலை செய்பவர்.) 1963-1965 கால கட்டத்தில் பெட்ரோலியப் பொருட்களை வாங்க வருவோர் கத்தைகத்தையாகப் பணத்தைப் பையில் எடுத்துக் கொண்டு வந்து Cashierஇடம் கொடுக்க வேண்டும். D.D அல்லது Cheque மூலம் பணம் பெற்றுக் கொள்ளும் முறை அந்தக்கால கட்டத்தில் அமுலில் இல்லை. ஒவ்வொரு நாளும் சுமார் அறுபதாயிரத்திலிருந்து எண்பதாயிரம் ரூபாய்வரை ரூபாய் நோட்டுக்களை எண்ண வேண்டும். மிகக் கடினமான வேலை. அவதானியின் உற்ற தோழன் ''பான்பராக்'' தான். இவன் புகழ்பெற்ற தெலுங்குப்பட இயக்குநரான K.விஸ்வநாத்தின் உறவினன்.

அப்போதுதான் சிறகுகள் முளைத்துப் பறப்பதற்கு முயன்ற இந்தியன் ஆயில் எம்ப்ளாயீஸ் யூனியனின் லோக்கல் செகரட்டரி.

நிர்வாகம் 1966ஆம் ஆண்டு தன் நரித்தந்திரத்தை உபயோகித்து இந்தியன் ஆயில் எம்ப்ளாயீஸ் யூனியனை உடைப்பதற்குச் சதிகள் பலவற்றை மேற்கொண்டது. அவற்றில் ஒன்று சிலருக்குப் பதவி உயர்வு அளிப்பதாகக் கூறி அவர்களை ''ஆந்திரா யூனியன்'' என்றதொரு அமைப்பை உருவாக்கும்படி மறைமுக சதி திட்டங்களில் ஈடுபட்டது. பதவி உயர்வுக்கு ஆசைப்பட்டு அவதானி விளக்கில் வீழ்ந்து மாளும் விட்டில் பூச்சிப்போல ஆனான். 1964ஆம் ஆண்டு வேலையில் சேர்ந்த அவதானி பனிரெண்டு ஆண்டுகள் கழித்துதான் பதவி உயர்வு பெற முடிந்தது.

**Gauger வீராசாமி நாயுடு ஓர் நடமாடும் ''தெலுங்கு அகராதிப் புத்தகம்''**

N.வீராசாமி நாயுடு கிழக்கு கோதாவரி தொகுதி முன்னாள் எம்.பி.ஆன ராஜகோபால நாயுடுவின் தூரத்து உறவினர். நிரந்தரம் ஆக்கப்படாத Gaugerஆக வாரச் சம்பள அடிப்படையில் வேலை பார்த்து வந்தான். S.S.L.C.படிப்பை முடிக்காத நாயுடுவிற்கு பலர் முயன்றும் Permanent Posting-ஐப் பெற்றுத்தர இயலவில்லை. கடின உழைப்பாளி. ராம் மோகன்ராவைப் போல எப்போதும் வெள்ளை உடையில் காட்சி அளிப்பான். அவ்வப்போது வெளிவரும் தெலுங்குப் படங்களைப் பற்றிய விமர்சனத்தை இவர் செய்திடுவார். இந்தப் படம் பார்ப்பதற்கு உகந்தது, அந்தப் படத்தைப் பார்க்க வேண்டாம் என்ற ஆலோசனையைத் தந்திடுவார். கடின நடையில் அமைந்துள்ள அல்லது பேசப்படும் தெலுங்கு வார்த்தைகளுக்கு பொருள் அறிந்து கொள்வதற்கு ஓர் நடமாடும் அகராதியாகத் திகழ்ந்து வந்தார்.

**அறையிலிருந்து தனிவீட்டிற்குக் குடிபெயர்ந்தேன்.**

சென்னை தண்டையார் பேட்டையில் இந்தியன் ஆயில் எண்ணெய்க்கிடங்கு 1965ஆம் ஆண்டு செயல்படத் தொடங்கியது. சென்னைக்கு மாற்றல் பெறலாம் என்ற என்னுடைய ஆசை நிறைவேறவில்லை. ஆனால் என்னுடைய அறையில் தங்கியிருந்த N.கார்த்திகேயன், R.சத்தியநாராயணா ஆகியோர் சென்னைக்கு மாற்றல் பெற்றுச் சென்று விட்டனர். நானும், மற்றொரு நண்பனுமான K.ராமமூர்த்தியும் DabaGarden பகுதியில் ஒரு வீட்டின் மாடிப் பகுதியில் குடிபெயர்ந்தோம். வேலைப்பளுவின் காரணமாக மாலை

2 மணிமுதல் இரவு 10 மணி வரையிலான Shiftமுறை அமுல்படுத்தப் பட்டது. பலநாட்கள் நான் மதியம் 1 மணிக்குக் கிளம்பி அலுவல கத்தைச் சென்றடைந்தால் இரவு 12 மணிக்குத்தான் தங்கியிருக்கும் இடத்திற்கு வந்து சேர முடியும். இரவு வரும்போது ஆள்அரவமற்ற அந்தச் சாலையின் ஒரு புறத்திலே கொழுந்து விட்டெரியும் பிணங்களே சாலை ஓர விளக்குகளாக ஒளி விட்டுக் கொண்டிருக்கும். சுகாதாரத்துடன் கூடிய எந்த உணவு விடுதியும் திறந்திருக்காது. இரண்டு வாழைப்பழத்தை தோலுடன் சேர்த்து உண்ட பிறகு நீரைப் பருக வேண்டும். அதுதான் என்னுடைய இரவுச் சாப்பாடு. வேலையின் களைப்பால் உறக்கம் கண்களைத் தழுவிடும். இரவு பட்டினி கிடப்பதற்கு, ஓர் முடிவு கட்ட வேண்டுமென்று நானே சமையல் செய்து சாப்பிடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டேன். காலையில் பில்டர் காபி. பிறகு ஏதாவது ஒரு காலை உணவு. மதியம் சாப்பாடு. அதே சாப்பாட்டை ஒரு கேரியரில் எடுத்துக் கொண்டு கோல்ஜெட்டி டெரிமினலுக்குப்போவது. அங்கே சரியாக இரவு 8 மணிக்குச் சாப்பிடுவது. எண்ணெய் நிரப்பப்பட்ட ஏதாவது ஒரு லாரியை நிறுத்தி வைத்து வேலை முடிந்தவுடன் பத்துமணிக்கு வீட்டிற்கு திரும்புவது. எப்பொழுதெல்லாம் செகன்ட் ஷிப்ட்டில் வேலைக்குப் போக வேண்டுமோ அப்பொழுதெல்லாம் இதுவே என்னுடைய அன்றாட செயல்பாடாக அமைந்திருந்தது.

**என்னைக் கொல்வதற்குச் செய்யப்பட்ட முதல் முயற்சி.**

மண்ணெண்ணை 18.5 லிட்டர் அளவு கொண்ட டின்களில் விற்பனை செய்யப்பட்டு வந்தது. பெரும்பாலான மண்ணெண்ணை வியாபாரிகள் 200லிட்டர் கொள்ளளவு கொண்ட பேரல்களை லாரிகளில் எடுத்து வந்து, இங்கே நிரப்பிக் கொண்டு கிராமம் கிராமமாகச் சென்று ஆங்காங்கு அவர்களுக்கு வேண்டிய அளவில் நிரப்பப்பட்ட பேரல்களைத் தந்து செல்வர். அவர்களிடமிருந்து காலி பேரல்களைப் பெற்றுக்கொள்வர். மறுநாள் காலை மீண்டும் மண்ணெண்ணை நிரப்பிக் கொள்வதற்காக விசாகப்பட்டினத்திற்கு வந்து சேர்வர். அனகாபள்ளி சின்ன அப்பாய் என்பவர் அதிகஅளவில் மண்ணெண்ணை விற்பனை செய்து வந்த டீலர்களில் ஒருவர். Filling Operators என்று அழைக்கப்பட்டு வந்த கீழ்நிலை ஊழியர்களில் ஒருவர் டேவிட். இவர் ஒன்றரைக்கண் பார்வை கொண்டவர். ஒரு நாள்

மாலை 4 மணிக்கு இவரால் சின்ன அப்பாய் கணக்கில் நிரப்பப்பட்ட எண்ணெய் பேரல்களை நான் Gatepass கொடுப்பதற்குச் சோதனை யிட்டபோது ஒவ்வொரு பேரலிலும் அதிகஅளவில் மண்ணெண்ணை நிரப்பட்டிருப்பதைக் கண்டேன். 40 பேரல்களிலும் எண்ணெய் ததும்பி வழிந்தது. இதை டெர்மினல் மேனேஜரிடம் தெரிவித்தேன். அவர் ஒவ்வொரு பேரலிலும் எத்தனை லிட்டர் எண்ணெய் உள்ளது என்பதை அளந்து, புகார் அளித்திடுமாறு பணித்திட்டார். லாரியில் இருந்த நிரப்பப்பட்ட பேரல்கள் அனைத்தும் கீழே இறக்கப்பட்டு ஒவ்வொரு பேரலில் இருந்த மண்ணெண்ணையை 20லிட்டர், 5லிட்டர், 1லிட்டர் கேன் கொண்டு அளந்தேன். 40 பேரல்களையும் இவ்வாறு அளப்பதற்கு இரவு 11 மணியாகி விட்டது. ஒவ்வொரு பேரலிரும் 5லிட்டர் முதல் 8லிட்டர் வரை அதிகப்படியாக நிரப்பப்பட்டிருந்தது.

அதன்பின்னர் எந்த லாரியை நான் அதிக அளவில் எண்ணெய் நிரப்பியதற்காகப் பிடித்தேனோ அதே லாரியில் ஓட்டுனர், அவன் பக்கத்தில் அதிக எண்ணெய் நிரப்பிய ஆபரேட்டர், அவன் பக்கத்தில் நான் ஆகிய மூவரும் டவுனை நோக்கிப் புறப்பட்டோம். அன்றையதினம் என்னைச் சாலையில் வண்டியில் சென்று கொண்டிருக்கும்போது கீழே தள்ளி கொல்ல முயற்சி செய்யப்பட்டதாகவும், அது நிறைவேறவில்லை என்றும் பின்நாட்களில் அறிந்தேன். குற்றம் புரிந்த டேவிட் வேலையைவிட்டு நீக்கப்பட்டார். இந்தியன் ஆயிலில் நான் பணி புரிந்து வந்தபோது என்னைக் கொல்லவும், என் குழந்தைகளைக் கடத்திச் செல்லவும் முயற்சிகள் பலமுறை அரங்கேறியுள்ளன. அவற்றில் முதல் முயற்சி மேற் சொல்லப்பட்ட நிகழ்ச்சியாகும். ***(அதனால்தான் மொட்டைக் கடுதாசிகளுக்கும், தொலைபேசி அச்சுறுத்தல்களுக்கும் தவறுகளைத் தட்டிக் கேட்பதற்கும் நான் பயப்படுவதில்லை.)***

**வாழ்க்கைப் படகில் மேற்கொண்ட பயணம்.**

1963ஆம் ஆண்டு மே மாதம் முதல் 1968 செப்டம்பர் மாதம் வரை விசாகப்பட்டினத்தில் பணிபுரிந்து வந்தேன். 1965ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் Supervisor ஆகப் பணி உயர்வு பெற்றேன். அதன்பிறகு 1968ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் Operations Officer Grade III பதவி உயர்வு பெற்று, செகந்தராபாத் மெட்டுகுடா ஆயில்

டெப்போவிற்கு பணிமாற்றம் பெற்றேன். 1967ஆம் ஆண்டு மார்ச் 26ஆம் நாள் பங்குனி உத்தரத்தில் எனக்கும் ருக்மிணிக்கும் திருமணம் திருவிண்ணகரப்பன் திருக்கோயிலில் நடைபெற்றது.

**ஜேம்ஸ்பாண்ட் 007.**

1963 முதல் 1968 வரை நான் பார்க்காத ஆங்கிலப் படங்களே இல்லை எனலாம். ஹிட்ச்காக்கின் படங்கள், ஜேம்ஸ் பாண்ட் படங்கள் அவற்றில் குறிப்பிடத்தக்கன. ஜேம்ஸ்பாண்ட் 007ஐ மையமாகக் கொண்டு முதலில் வெளிவந்த படம் Dr.No என்பதாகும். இந்தப் படம் 1962ஆம் ஆண்டு வெளிவந்தது. நான் இந்தப் படத்தை விசாகப்பட்டினம் லீலாமஹாலில் 1964ஆம் ஆண்டு இறுதியில் பார்த்தேன். Ian Fleming என்பவர் எழுதிய நாவல்கள் அனைத்தும் படமாக்கப்பட்டுள்ளன. அவர் எழுதிய முதல் நாவல் (1953) Casino Royale என்பதாகும். அதன் பிறகு அவர் எழுதிய நாவல்களில் ஒன்றான Dr.No என்னும் நாவல் தான் 1962ஆம் ஆண்டு முதன் முதலில் படமாக்கப்பட்டது. இதில் ஜேம்ஸ்பாண்டாக Sean Connery என்பவர் நடித்திருந்தார். Dr.Noவைத் தொடர்ந்து அவர் From Russia with Love (1963), Goldfinger (1964), Thunderball (1965), You Only Live Twice (1967), Diamonds Are Foreover (1971), ஆகிய படங்களில் இவர் ஜேம்ஸ்பாண்டாக நடித்திருந்தார். அவருக்குப் பிறகு அந்தக் கதா பாத்திரத்தில் George Lazenby (On Her Majesty's Secret Service)-1969, Roger Moore, Live and Let Die (1973), The Man with the Golden Gun (1974), The Spy Who Loved Me (1977), Moonraker (1979), For Your Eyes Only (1981), Octopussy (1983), A View to a Kill (1985).

Ian Flemingஆல் உருவாக்கப்பட்ட ஒரு கற்பனைப் பாத்திரமே ஜேம்ஸ்பாண்ட் 007. 1964ஆம் ஆண்டு Fleming இறந்த பிறகு ஜேம்ஸ்பாண்டை மையமாகக் கொண்ட நாவல்கள் பிற நாவல் ஆசிரியர்களால் எழுதப்பட்டன. ஜேம்ஸ்பாண்ட் நாவல்களைத் தழுவி தெலுங்கு மொழியில் Gudachari 117 என்ற தலைப்பில் பல படங்கள் வெளி வந்தன. அதேபோல் தமிழிலும் C.I.D. படங்கள் வெளிவந்தன. Dr. No. படத்தில் Dr. No.தான் வில்லன். ஜேம்ஸ்பாண்டிற்கு நிகராக வீரமும், வல்லமையும் படைத்தவன். Dr. No.ஆக நடித்தவர் Joseph Wiseman என்பார். இவர் 60 ஆண்டுகள் வில்லனாக நடித்து,

தம்முடைய 91ஆவது வயதில் இறந்தார். ***(இவருக்குப் புகழாரம் சூட்டி திரு. கங்காதரன் அவர்களால் எழுதப்பட்ட கட்டுரை ஒன்று 6-11-2009 ஹிந்து நாளிதழில் வெளிவந்துள்ளது.)***

## எழில் கொஞ்சும் விசாகப்பட்டினம் கடற்கரையும், Lawson's Bay இன் அழகும்

பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான கிரிக்கெட் போட்டி ஆந்திரா பல்கலைக்கழக பொறியியற் கல்லூரி வளாகத்தில் அவ்வப் போது நடைபெறும். ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும் இந்தப் போட்டிகளை நான் நேரில் சென்று பார்த்து வருவேன். தற்போதைய 'தி ஹிந்து' நாளிதழின் ஆசிரியரான ராம், சென்னைப் பல்கலைக் கழகத்தின் சார்பில் கலந்து கொண்டு விளையாடியபோது அந்தப் போட்டிக்கு நான் சென்றிருந்தேன். விசாகப்பட்டினத்தின் எழில் கொஞ்சும் கடற்கரையில் உலாவி வருவது மனதிற்குப் பெரும் மகிழ்ச்சியைத் தரும். Dolphin's Nose என்று அழைக்கப்படும் மலை உச்சியில்தான் கலங்கரை விளக்கம் அமைந்துள்ளது. இந்தக் கலங்கரை விளக்கத்திற்குத் தேவையான மண்ணெண்ணை விசாகப் பட்டினம் இந்தியன் ஆயில் நிறுவனத்திலிருந்துதான் பெற்றுக் கொள்ளப்பட்டது. கடற்கரையின் ஓரத்தில்தான் Caltex உயர் அதிகாரி களுக்கான குடியிருப்பு அமைந்திருந்தது.

ஆந்திரா பல்கலைக்கழகத்திலிருந்து சிறிது கிலோமீட்டர் தொலைவில் ராமகிருஷ்ணா கடற்கரை அமைந்துள்ளது. அங்கிருந்து சிறிதுதூரம்சென்றால் Lawson's bay என்று அழைக்கப்படும் மிக அழகான கடற்கரைப் பகுதி காணப்படும். இதுவொரு வளைவுப் பகுதி. கடல் அலைகள் ஆர்ப்பரிக்காத இடம். சுமார் 1கிலோமீட்டர் தொலைவு வரை கடல் அமைதியாக காணப்படும். கடலோரத்தில் குட்டைத் தென்னை மரங்களும் ஆங்காங்கே புன்னை மரங்களும் காணப்படும். எந்தவித அச்சமுமின்றி சுமார் 1 கிலோமீட்டர் நீளம்வரை கடலுக்குள் சென்று நீராடலாம். ஆனால் 1 கிலோமீட்டர் தொலை வுக்கு அப்பால் சுறாமீன்கள் கூட்டம் கூட்டமாகக் காணப் படும். கடல் அமைதியாக உள்ளதே என்று நீண்ட தூரம் செல்வோர் சுறாமீன்களால் தாக்கப்படக்கூடும். ஒவ்வொரு சுறாமீனும் கொழுத்துப் பருமனுடன் காணப்படும். அவை தம் வாளால் ஓங்கி அடித்தால் முகத்திலும்

உடம்பிலும் காயம் ஏற்படும். Lawson's bay-இன் அழகு என்றும் மாறாதது.

**1964ஆம் ஆண்டு இந்தியாவில் நடைபெற்ற இந்தியாவிற்கும் ஆஸ்திரேலியாவிற்கும் இடையேயான கிரிக்கெட் போட்டிகள்.**

1964 ஆம் ஆண்டு பலம் பொருந்திய ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்கள் இந்தியாவிற்கு வருகை தந்தனர். புகழ் பெற்ற தொடக்க ஆட்டக்காரர் ஆன Bob Simpson இந்த அணிக்குத் தலைவராகச் செயல்பட்டார். கிரிக்கெட் விளையாட்டின் போது விக்கெட் கீப்பருக்கு இடக்கை பக்கமோ, அல்லது வலக்கை பக்கமோ நிற்பவருக்கு First slip என்று பெயர். Bob Simpson இந்த First Slip Positionலிருந்து பல பந்துகளைப் பிடித்திருக்கிறார். இவர் ஒரு சிறந்த சுழற்பந்து வீச்சாளரும் ஆவார். Richie Benaud விற்குப் பிறகு அணித் தலைவர் பொறுப்பை ஏற்றவர் Bob Simpson. அவருக்குப்பிறகு Bill Lawry அணித்தலைவரானார். இந்தியாவில் நடந்த போட்டிகளில் ஆஸ்திரேலியாவின் தொடக்க ஆட்டக்காரர்களாக விளங்கியவர்கள் Bob Simpson உம், Bill Lawryஉம் ஆவர். இந்திய அணிக்கு Nawab of Pataudi கேப்டனாகப் பொறுப்பு வகித்தார். முதல் டெஸ்ட் சென்னை நேரு ஸ்டேடியத்தில் நடைபெற்றது. இந்த ஸ்டேடியம் பழைய மூர் மார்க்கெட்டின் பின்புறம் அமைந்திருந்தது. பல ஆண்டுகளுக்குப் பிறகு சேப்பாக் பகுதியில் புதிதாக ஸ்டேடியம் கட்டப்பட்டது. இங்கு நடைபெற்ற டெஸ்டில் ஆஸ்திரேலியா அணி 139 ரன்களில் வெற்றி பெற்றது. சென்னையில் நடந்த போட்டியில் இந்தியச் சுழற்பந்து வீரரான Bapu Nadkarni இரண்டு இன்னிங்ஸிலும் சேர்த்து 122 ரன்கள் கொடுத்து 11 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இந்தியத் தரப்பில் Nawab of Pataudi 128 ரன்கள் எடுத்தார். ஆஸ்திரேலியத் தரப்பில் இளம் வேகப்பந்து வீச்சாளரான McKenzie 91 ரன்கள் கொடுத்து 10 விக்கெட்டுகளை வீழ்த்தினார். சென்னையில் இந்தப் போட்டி 2-10-1964 தொடங்கி 7-10-1964 வரை நடைபெற்றது.

இரண்டாவது டெஸ்ட் 10-10-1964 தொடங்கி 15-10-1964 வரை பம்பாயில் நடைபெற்றது. இதில் இந்தியா 2 விக்கெட்டு வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ஆஸ்திரேலியா முதல் இன்னிங்க்ஸ் Score 320, 2ஆவது இன்னிங்க்ஸ் Score 274, இந்தியத்தரப்பில் கர்னாடகாவின் புகழ் பெற்ற சுழற்பந்து வீச்சாளரான B.சந்திரசேகர் 50

ரன்களுக்கு 4 விக்கெட்டுகளையும், நட்கர்னி 33 ரன்கள் கொடுத்து 4 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். இந்திய இன்னிங்க்ஸ் ஸ்கோர் முதல் இன்னிங்க்ஸ் 341, 2ஆவது இன்னிங்க்ஸ் 8 விக்கெட்டு இழப்பிற்கு 256 ரன்கள். இந்தியத்தரப்பில் Nawab of Pataudi உம், திலீப் சர் தேசாயும் முறையே 86, 56 ரன்கள் எடுத்தனர்.

கல்கத்தாவில் 17-10-1964 முதல் 22-10-1964 வரை நடை பெற்ற 3ஆவது டெஸ்ட் டிராவில் முடிந்தது. இந்திய அணியின் மிகச் சிறந்த ஆல் ரவுண்டரான சலீம் துரானி இந்தப் போட்டியின்போது 73 ரன்களில் 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார். ஆஸ்திரேலியா தரப்பில் அணித்தலை வரும், ஆல்ரவுண்டருமான Bob Simpson 45 ரன்கள் கொடுத்து 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இந்தியத் தரப்பில் 3 டெஸ்ட்களிலும் புகழ்பெற்ற சுழற்பந்து வீச்சாளர்களான Borde, Nadkarni, Chandrasekar ஆகியோர் சிறப்பாக விளையாடினர். இந்திய அணிக்கு கபில்தேவ் வந்து சேரும்வரை வேகப்பந்து வீச்சாளர்களுக்கு பஞ்சம் ஏற்பட்டிருந்தது. ***(தற்போது இந்தியத் தரப்பில் சிறந்த வேகப் பந்து வீச்சாளர்களும், பல்வகைப்பட்ட சுழற்பந்து வீச்சாளர்களும் சமஅளவில் அமைந்துள்ளனர். சர்ச்சைகளுக்கு அப்பாற்பட்ட அணித்தலைவரான*** Dhoni***யின் தலைமையில் இந்தியக் கிரிக்கெட் வெற்றி வாகை சூடி வருகிறது.)***

### ஹிந்தி மொழிக்கு எதிரான போராட்டமும், அதன் விளைவுகளும்

1965ஆம் ஆண்டு முதல் ஹிந்தி மொழியே ஆட்சி மொழியாகும் என்ற மத்திய அரசாங்கத்தின் கொள்கைக்குப் பலத்த எதிர்ப்பு தமிழ்நாட்டில் எழுந்தது. திரு.C.N.அண்ணாதுரை தலைமையிலான திராவிட முன்னேற்றக்கழகம் போராட்டங்கள் பலவற்றை மேற்கொண்டது. சீனப்படையெடுப்பின்போது தமது தனித்திராவிட நாடு கோரிக்கையைக் கைவிட்டுவிட்டதாகக் கூறிய தி.மு.க. ஹிந்தி எதிர்ப்புப் போராட்டத்தை அரங்கேற்றியது. மதம், இனம், மொழி ஆகியவை எளிதில் தீப்பிடிக்கச் செய்ய உதவும் கருவிகளாகும். இதை நாம் அவ்வப்போது கண்டு வருகிறோம். இவற்றில் ஒன்றுதான் ஆரியர், திராவிடர் என்று தமிழக மக்களைப் பிரித்துக் காண்பிப்பது. திரு.அண்ணாத்துரை ஹிந்தி என்பது ஒரு வட்டார மொழியே ஒழிய அதற்கென எந்த இலக்கிய, இலக்கண வளமும் இல்லை. ஆகையால் அது தேசிய மொழியாக ஆவதற்கு எந்தத் தகுதியும் பெறவில்லை என்று வாதிட்டார். அதிக அளவில் இந்தியாவில் பேசப்படுவது ஹிந்தி மொழியே, ஆகையால் அந்த மொழி தேசிய

மொழியாய் இருப்பதற்கு எல்லாத்தகுதிகளையும் கொண்ட மொழியாகும் என்ற கூற்றிற்கு அவர் அப்படிப் பார்க்கப் போனால் தேசியப்பறவையாக மயில் இருப்பதை விட அதிக அளவில் காணப்படும் காக்கைப்பறவை அல்லவோ இருக்க வேண்டும் என்று கிண்டலாகக் குறிப்பிட்டார். (ஆதாரம்: A.S.Raman-' A Meeting with C.N. Annadurai- Illustrated weekly of India. 26-9-1965)

1965ஆம் ஆண்டுக்குப் பிறகும் தமிழக மக்கள் விரும்பும் வரை ஆங்கிலம் கூட்டு தேசிய மொழியாக விளங்கும் என்று நேரு தந்த உறுதிமொழிக்கு லால் பகதூர் தலைமையிலான அரசாங்கம் மதிப்பு அளிக்கவில்லை. தாண்டன் போல்வாருடைய உத்தரபிரதேச ஹிந்தி வெறியர்கள் எப்பாடுபட்டேனும் ஹிந்தி ஒன்றே தேசிய மொழியாகக் கொள்ளப்படவேண்டும் என்பதில் உறதியாக நின்றனர். ***(உத்தரப் பிரதேச மக்களவை உறுப்பினர்கள் தான் ஒரு கால கட்டத்தில் நாட்டின் பிரதமராய் யார் இருக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்க வந்தனர். ஆனால் நிலைமை தற்போது தலைகீழாக மாறிவிட்டது. மானம், ரோஷம் ஏதுமில்லாத நடைபிணங்களாய்ப் வாழும் காங்கிரஸ் ஒரு காலத்தில் இந்திராகாந்தியைக் கொல்ல முயன்ற தி.மு.க. வினருடன் உறவு கொண்டு அந்தக் கட்சி இடும் பிச்சையை சட்டியில் ஏந்திக் கொண்டு காமராஜ் ஆட்சியை மீண்டும் மலரச் செய்வோம் என்ற வெற்றுக் கோஷம் இட்டுக் கொண்டு இருக்கின்றனர். ஆனால் காங்கிரஸ் கட்சி தி.மு.கவின் கண்ணில் விரலை விட்டு ஆட்டிய நிகழ்ச்சிகள் 1965ஆம் ஆண்டு நிறைவேறின.)***

26-1-1965ஆம் நாள் முதல் ஹிந்தி ஒன்றே ஆட்சி மொழியாகக் கொள்ளப்படும் என்ற முடிவை ஒரு வார காலத்திற்குத் தள்ளிப் போடவேண்டும் என்ற வேண்டுகோளை திரு.அண்ணா துரை பாரதப் பிரதமரான திரு.லால்பகதூர் சாஸ்திரியிடம் முன் வைத்தார். மேலும் 26-1-1965ஆம் நாளை துக்க நாளாக தி.மு.க. அறிவித்து அன்றையதினம் போராட்டங்களில் ஈடுபடப்போவ தாகவும் திரு.அண்ணாதுரை அறிக்கை வெளியிட்டார். ஆனால் திரு. லால்பகதூர் சாஸ்திரி திரு. அண்ணாதுரையின் இந்தக் கோரிக்கைக்கு செவி சாய்க்கவில்லை. மாறாக 26-1-1965 தொடங்கி முன் அறிவித்த படி ஹிந்தி ஒன்றுதான் ஆட்சி மொழியாகக் கொள்ளப்படும் என்ற மத்திய அரசின் முடிவில் எந்த மாற்றமும் இல்லை என்று அறிவித்தார்.

(தொடரும்)